Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருகை யின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 | பிரபலமான ராஜாக்களை அழித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது சங்.136:18 | மேய் 2018 No.5

தேவனிடத்திலுள்ள விசுவாசத்தில் எதிர்காலத்தை சந்தியுங்கள்

Face the future with faith in God

W.C. Moore

பலவிதங்களில் இந்நாட்கள் அந்தகாரமாகக் காணப்படுகின்றன. குற்றங்கள் பெருகிவருகின்றன. அதிர்ச்சியூட்டும் தீய ஒழுக்க செயல்களும் ஊழல்களும் பரவலாகக் காணப்படுகின்றன. பயங்கரவாதம் அதிகரித்து இளம் தலைமுறையினரை துன்பங்களுக்கு இலக்காக்குகிறது. எனவே குடும்பங்கள் அதிக அளவில் துண்டிக்கப்படுகின்றன. தேவனுக்கு எதிரான ஆவி அதிகமாகக் காணப்படுகிறது. அதினால் சுவிசேஷம் வல்லமையாகவும் சுத்தமாகவும் பிரசங்கிக்கப்பட்ட இடங்களில் லௌகீகம் வெளிப்படுத்தப்படுகிறது.

கிறிஸ்தவன் செய்ய வேண்டியதென்ன?

மத்.24:12-ன் படி "அக்கிரமம் மிகுதியாவதினால் அனேகருடைய அன்புதணிந்து போம்". அந்த 'அனேகரில்' நாம் உட்படலாமா! நமக்கு நேரடியான ஒரு சவாலும் எச்சரிக்கையும் அளிக்கப்படுகிறது. நாம் விழித்தெழுந்து தேவனைப் பற்றிக்கொண்டு நமது குறிக்கோளுக்கு நேராக விசுவாசத்தோடு ஓட வேண்டும்.

2 தீமோ.3:1-17 வரை சொல்லப்பட்டிருக்கும் பொல்லாத நாட்கள் நாம் பின்னடைவதற்காக அல்ல, முன்னேறிச் செல்லவே கூறப்பட்டுள்ளன. எனவே இன்று நாம் சந்திக்கும் பயங்கரங்களும், ஆபத்துகளும் நமக்கு வாய்ப்புகளாக அளிக்கப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் சுற்றிலுமுள்ள சம்பவங்களைப் பார்க்காதபடி கண்களை மூடிக்கொள்வதோ தீக்கோழியைப் போல தலையை மண்ணில் புதைத்துக் கொள்வதோ கிறிஸ்தவனுக்குச் சரியல்ல. ஏனெனில் இப்படிச் செய்து நன்மை பெறவோ, ஓடிப்போய்விடவோ முடியாது.

மக்கள் மத்தியில் நாம் சாட்சியாயிருக்க வேண்டும் அப்.1:8. எங்கோ நுழைந்து ஒளித்துக் கொள்ளாமல் யாரேனும் ஒருவருக்காவது சாட்சியாயிருக்க வேண்டும். பயம், அவிசுவாசம், கரிசனையின்மை போன்ற மரக்காலினடியிலிருக்கும் விளக்கை எடுத்து அழிந்து போகும் ஆத்துமாக்களுக்குக் காண்பிக்க வேண்டும். மத்.5:14-16 வசனங்களைப் படிக்க.

தேவ அன்பு, தேவன் நமக்களித்த மிகப்பெரிய இரட்சிப்பின் நம்பிக்கை, அவர்மேலுள்ள அசையாத பயபக்தி ஆகியவை தான் நம்மிலுள்ள வெளிச்சம். இந்த வெளிச்சம் நம்மைச் சுற்றிலும் பயத்திலும், நம்பிக்கையின்மையிலும் வாழும் மக்கள் மீது வீசப்பட்டு அவர்களும் தேவனிடம் திரும்ப வேண்டும்.

தேவனுடைய உத்தமத்தில் முழுமையான சார்பு

இருள் சூழ்ந்த இந்நாட்களில் வரும் பிரச்சனைகளை எல்லாம் தேவனுடைய உத்தமத்தை சார்ந்து எதிர்கொள்ள வேண்டும். எந்தக் கடின சூழலும் தேவனுக்குக் கடினமானவைகளல்ல. அவர் எல்லாவற்றையும் அறிபவர். நம்மைக் குறித்த கரிசனையுடையவர் 1 பேது.5:7; 1 யோவா.3:20. 'உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை' எரே.32:17. 'தேவனாலே எல்லாம் கூடும்' மத்.19:26.

கடினமான சூழல்கள், சிக்கலான தடைகள், துக்கமான சோதனைகள், பெரிய தேவைகள், பாரமான பொறுப்புகள் ஆகியவற்றை பயத்தோடும், நடுக்கத்தோடும் சந்திப்பதைவிட களிகூருங்கள்! இவை எல்லாவற்றையும்விட தேவன் பெரியவர். அவர் நம்மை நேசித்து நாம் அவரை நம்பி அவருக்குக் கீழ்ப்படிவதை விரும்புகிறார். தேவன் எந்தவிதமான சிக்கலான நிலைக்கும் மேலானவர். எனவே அவை நம்மை பயப்படுத்தத் தேவையில்லை.

நமது பாதைகளில் நம்மால் கூடாத கடமைகள் நேரடியாகக் குறுக்கிடும்போது அவை நம்மைச் சரியான பாதையில் நடத்தவும், தேவ ஒத்தாசையால் அவற்றை தேவனைப் பிரியப்படுத்தும் விதமாகவும், அவரை மகிமைப்படுத்த ஏதுவாகவும் செய்ய ஏதுவாகும் என்று அறியவேண்டும். எனவே அவருடைய சித்தம் பரத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படும்.

தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தந்து தமது மன உருக்கத்தாலும், அன்பினாலும் அன்பை விளங்கப் பண்ணியிருக்கிறார் (1 பேதுரு 4:12-19, ரோ.8:26-39) எனவே கடின சூழல்கள் நெருக்கடியான பணிகள் மத்தியில் தேவன் கைவிட்டுவிட்டார், அவரது வல்லமை குன்றிவிட்டது, அவரது ஞானமும் குறைந்துவிட்டது, அவர் நமது சிருஷ்டிகரா என்றெல்லாம் எண்ண வேண்டியதில்லை. தேவன் தமது உத்தமத்தையும் இயற்கைக்கு மேலான வலிமையையும் நம் மூலமாக விளங்கப் பண்ண இக்கடின சூழல்களை பயமின்றி ஆவலோடு எதிர்கொள்வோம்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல், எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" பிலி.1:6.

நேர்மையாக வாழுங்கள்

தேவனுடைய சித்தப்படி அவருடைய வார்த்தையின்படி நமது வாழ்வு கடைசி மட்டும் தேவ ஒத்தாசையுடன் நடத்தப்பட வேண்டும். அதாவது பாவத்தில் வாழாமலும், அவரது வார்த்தையை விசுவாசியாதபடியால் அவரை துக்கப்படுத்தாமலும், பிற கிறிஸ்தவர்களை விமர்சிப்பதன் மூலமும், கவலை யீனம், சுயநலம், ஏமாற்றுதல், பிறரை வெறுத்தல் கடமையை உதாசீனம் செய்தல் அல்லது கீழ்ப்படியாமை போன்றவற்றாலும் அவரை வேதனைப்படுத்தக்கூடாது.

"பிரியமானவர்களே நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவை களைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்கிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம்" 1 யோ.3:21,22.

"பயப்படாதிருங்கள்"

லூக்.8:50-ல் நமது ஆண்டவர் "பயப்படாதிருங்கள்" என்று கூறுவதைக் காண்கிறோம். இதற்கு நாம் முழுமனதோடும் விழிப்போடும் கீழ்ப்படிவோம். வெறுப்பு, பயம், அவிசுவாசம் ஆகியவற்றை உதறித்தள்ளுவோம். "தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்" ரோமர் 12:9. "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" மத்.4:4. எனவே வேத வசனத்தை உட்கொள்ளுங்கள், அதை தியானியுங்கள். தேவ வசனத்தை வாசிக்கவும் சிந்திக்கவும் சமயம் உருவாக்கி, சமயமெடுத்து, சமயத்தை பயன்படுத்துங்கள் அப்போது அவரது சித்தத்தை அறிந்து அவரது சித்தம் செய்ய பெலனடைவோம்.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
Mobile: 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும். *ஏசாயா 61:7*

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இந்த ஆசிரியர் கடிதத்தை எழுத ஆரம்பிக்கும் போது வருகையின் தூதன் அலுவலகத்திற்கு வந்த ஒரு கடிதத்தின் சிறு பகுதியை மாத்திரம் வாசகரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்:

கடிதம்

BJP ஆட்சிக்கு வந்ததில் இருந்து தாய் இயக்கமான ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி ஆகிய இவர்களின் கூக்குரல் பெரிதாக ஒலித்துக்கொண்டு இருக்கிறது. அவர்கள் மட்டும்தான் இந்தியர்கள் போலவும், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஏதோ வெளிநாட்டில் இருந்து வந்தது போலவும், அவர்களுக்கு மட்டும்தான் இந்த தேசமும், தேச பக்தியும் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு நமக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரும் பணத்திற்காக மதம் மாறியவர்கள் என்றும் இப்பொழுதும் பணம் கொடுத்து மதம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் உண்மையற்ற செய்திகளை பரப்பி கிறிஸ்தவ ஆலயங்கள், ஜெபவீடுகள், போதகர்கள், திருச்சபை மக்கள் தாக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

* * * * * * *

இப்பேர்பட்ட சூழ்நிலை, சபை ஆரம்பித்த நாளில் இருந்தே ஆரம்பித்துவிட்டது என்பதை அன்பான எனது வாசகருக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஆனால்.....

"அவர்கள் அதைக்கேட்டு, ஒருமனப்பட்டுத் தேவனை நோக்கிச் சத்தமிட்டு: கர்த்தாவே, நீர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனாயிருக்கிறீர்.

புறஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதா காரியங்களைச் சிந்திப்பானேன் என்றும், கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்து வுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங் கூடினார்கள் என்றும் தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே.

அந்தப்படி உம்முடைய கரமும் உம்முடைய ஆலோசனையும் முன்குறித்தவைகள் யாவையும் செய்யும்படி,

ஏரோதும் பொந்தியுபிலாத்தும், புறஜாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட, நீர் அபிஷேகம் பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய், மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்.

இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல் களைத் தேவரீர் கவனித்து,

உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய **இயேசுவின் நாமத்தினாலே** அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, **உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி** அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும் என்றார்கள்.

அவர்கள் ஜெபம் பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். அப். 4:24-32

ஒரு பத்திரிகையில் வாசித்த சில வரிகளை கீழே எழுதுகிறேன்:

"200 கோடி மக்களுக்கும் அதிகமாக சுவிசேஷத்தை பிரசங்கித்த **பில்லிகிரஹாம்** கூறியது, தேசத்தை எழுப்புதலுக்கு நேராய் கொண்டு செல்ல 3 காரியங்கள் உள்ளது. ஒன்று ஜெபம், இரண்டு ஜெபம், மூன்று ஜெபம். **பில்லிகிரஹாம்** ஓர் இனிமையான பாடகர் அல்ல, அற்புத சுகமளிக்கும் காரியங்களும் கிடையாது. ஆராதனை வீரரும் கிடையாது. ஆனால் இவர் ஓர் மாபெரும் ஜெப வீரர். இவர் தினமும் குறைந்தது 3 மணி நேரமாவது ஜெபிக்கும் பழக்கம் உள்ளவர்."

அருமையான தேவ ஜனமே, ஜெபம் மிகப்பெரிய ஊழியம். இதனை அசட்டை பண்ணாதீர்கள். மும்பை உபவாச ஜெபத்திற்கு செல்வதற்கு முன்பாக சற்று அவசரமாக இதனை எழுதுகிறேன். சமயம் வாய்த்தாலும், வாய்க்கா விட்டாலும் ஜெபம் பண்ணுங்கள்.

மும்பை உபவாச ஜெபம்

தேவனுடைய அளவற்ற கிருபையினால் ஏப்ரல் மாதம் 12-ம் தியதி வியாழன் காலை 5.00 மணிக்கு நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு, 13-ம் தியதி வெள்ளி, 3 மணி நேரம் தாமதமாக இரவு 11.00 மணியளவில் மும்பை போய் சேர்ந்தோம்.

14-ம் தியதி சனிக்கிழமை வழக்கம்போல உபவாச ஜெபம் நடைபெற்றது. சில காரணங்களால் கொஞ்சம் பேர்கள்தான் உபவாச ஜெபத்திற்கு வந்திருந்தார்கள். இந்த உபவாச ஜெபத்தை ஒருங்கிணைந்தவர், புதன்கிழமை கார் விபத்தில் சிக்கியதால் அநேகரை அழைத்து வர இயலாமற் போயிற்று.

உபவாச ஜெபத்தை தேவன் கிருபையாய் ஆசீர்வதித்தார். ஜெபம் முடிந்த பிறகு ஒரு சகோதரி வந்து, "உங்கள் தகப்பனார் எங்கள் இல்லத்தில் தங்கியுள்ளார்கள்; இன்றைக்கு விதைத்த விதை பலன் தரும்" என்று கூறினார்கள்.

இன்னொரு இளம் தம்பதியினர் மிகவும் அன்புடன் என்னிடம் வந்தார்கள். அந்த இளம் பெண், "அப்பா தமிழ்நாட்டிலிருந்து எனக்கு போன் பண்ணி, இந்த உபவாச ஜெபத்தில் கலந்து கொள்ள சொன்னார்கள்; அதனால் வந்தோம்" என்று கூறினாள். அவள் கணவனும் இந்த உபவாச ஜெபம் நன்றாக இருந்தது என்று கூறி பத்திரிக்கைக்கு முகவரி கொடுத்தார்கள். தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக. இப்படிப்பட்ட பெற்றோருக்காக அடியேன் தேவனை துதிக்கிறேன்.

அடுத்த நாள் ஞாயிறு காலை **தானாவிஷ்ஷள்ள மெதடிஸ்ட் தமிழ் சபையில்** தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க தேவன் இரக்கம் பாராட்டினார். அருமையான அந்த சபைக்காகவும், அதன் போதகர் **Rev.F.Y. ஞானசீலன்** அவர்களுக்காகவும், சபையார் பாராட்டின அன்புக்காகவும் அடியேன் ஆண்டவரை அதிகமாய் துதிக்கிறேன். தேவன்தாமே கிருபையாய் அந்த திருச்சபையை ஆசீர்வதிப்பாராக.

ஞாயிறு பகல் 1.00 மணிக்கு புறப்பட்டு செவ்வாய் அதிகாலை 4.00 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர தேவன் உதவி செய்தார் ஜெபித்த உங்களுக்கு எங்கள் அன்பான நன்றியை தெரிவிக்கிறோம். நம் தேவன் ஒருவரே மகிமைக்கு பாத்திரர். வெளி. 4:11

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:	வங்கி கணக்கு எண்
வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001 VARUKAYIN THOOTHAN Newport Street, Nagercoil-629 001. **Mobile:** 95432 21008 **email:** Varukayinthoothan@hotmail.com	VARUKAYIN THOOTHAN A/c. No.:431521036 Indian Bank, W.C.C. Road, Nagercoil-1 IFS Code : IDIB000N006 வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடலுக்கான உணவை விட இந்த ஆத்மீக மன்னாவை அதிகமாக நாடுவோம். அனுதின செய்திகளைப் படிப்பதை விட இதில் அதிக கவனம் செலுத்துவோம்.

இருளின் நாட்களில் தேவனை நம்புவோம்

ஈசாக்கைப் பெற்றுக்கொள்ள ஆபிரகாம் பல ஆண்டுகள் காத்திருந்தான். அதுபோல் ஜெபத்திற்கான பதில் தாமதித்தாலும் தேவனை நம்பி ஜெபத்தில் காத்திருக்கப் பழக வேண்டும்.

"உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக்கேட்டு, தனக்கு வெளிச்ச மில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி தன் தேவனை சார்ந்து கொள்ளக்கடவன்" ஏசா.50:10.

பிள்ளைகள் இருளிலும் பெற்றோரை நம்பி செல்லுகிறதில்லையா? அப்படியானால் மனந்திரும்பி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நாம் தேவகுமாரன் மீது எவ்வளவு நம்பிக்கை வைக்கவேண்டும்!

தாவீது, பவுல் போன்றவர்கள் துன்பமின்றி வாழவில்லை. சங்கீதங்கள், 2 கொரி.11:23-33; 12:1-10, பிலி.4:13 ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள். நமது அன்பின் ஆழத்தை நாம் அறிய வேண்டும். அதுபோல் தேவன் நமக்கு காண்பிக்கும் அன்பின் அளவை யும் அறியவேண்டும் "அவர் நமக்காக பாடுபட்டு சோதிக்கப்பட்டார்". அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படியே அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் ரோமர் 8:28.

தேவனுடைய இருதயத்தை சந்தோஷப்படுத்தும் அந்த எளிய விசுவாசம் நம்மில் வேண்டும்."விசுவாசிப்பது மிகக் கடினம்" என்று ஒரு காலத்தில் நான் எண்ணினேன். அப்போது ஆண்டவர் என் இருதயத்தில், 'விசுவாசிப்பது கடினமல்ல, ஒரு குழந்தை கூட விசுவாசிக்கலாம், அதற்கு யோசிக்க வேண்டியதில்லை' என்றார். அது கடந்த காலங்களிலெல்லாம் எனக்கு ஆதரவா யிருந்தது, எனக்கு ஆறுதலுமளித்தது.

"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு" நீதி.3:5. இந்த வசனத்துக்குக் கீழ்ப்படிந்து ஆண்டவரை முழு மனதோடும் விசுவாசிப்பதால் கவலைப்படவும், பயப்படவும் நம் இருதயத்தில் இடமிராது. சந்தேகத் திற்கும் பயத்திற்கும் இடமளிக்கக் கூடாது. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அவனுக்கு இடமளிக்க வேண்டாம் (யாக்.4:7-8, எபே.4:27).

புயல் மேகங்களில் வானவில்லைப் பாருங்கள்

தேவன் அற்புதமானவர். அவரது வழிகள் நம்முடைய வழிகளல்ல ஏசா.55:8-13. ஈசாக்கு வாக்குப்பட்ட பின்பு ஆபிரகாம் பல ஆண்டுகள் காத்திருந்தான் எபி.11:8-12.

அற்புதங்கள் செய்த தேவ குமாரன் கள்வர்கள் மத்தியில் சிலுவை யிலறையப்பட்டபோது, தனியாக இருளில் அவர் விடப்பட்ட அனுபவம் தோல்வியாகவேபட்டது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் ஆயிரக்கணக் கான யூதர்கள் இரட்சிக்கப்பட்டனர்.

நாம் வாழும் இந்த இருளின் நாட்களில் இன்னொரு வல்லமையான எழுப்புதலுக்காக ஜெபிப்போம். அதின் மூலம் புறஜாதிகள் திரளாக எழும்பி இஸ்ரவேல் அவரிடம் தயவுபெறுமுன் சேர்க்கப்படட்டும். ரோமர் 11:1-32. நமது முகங்களைத் திருப்புவோம். தானி.9:3. தேவனைப் பற்றிக்கொள்ள எழும்பு வோம் ஏசா.64:7. தேவன் நம்மீது நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும் ஜெபிப் போம் ஓசி.10:12. அவர் வாக்குப் பண்ணி யதுபோல மாம்சமான யாவர்மேலும் ஆவியை ஊற்றி அவர் நாம மகிமைக்காக அனேகரை இரட்சிப்பார். (யோவேல் 2:28-32, யாக்.5:7)

ஆபத்துக்காலத்தில் நமது அடைக்கலம்

Our refuge in times of trouble

Rich Carmicheal

சங்கீதக்காரன் 46-ம் சங்கீதத்தில், 'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூல மான துணையுமானவர்" என்ற உண்மையை வெளிப்படுத்துகிறார். அதனால் "பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந் தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப் படோம்" 46:2,3. ஆக தேவன் நம்மோடு இருந்தால் நமக்கு எந்த பயமுமே யில்லை. "நான் மரண இருளின் பள்ளத் தாக்கிலே நடந்தாலும், பொல்லாப் புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" சங்.23:4.

கடின சூழல்களிலும் எப்போ துமே அருகிலுள்ள யாவற்றையும் ஆண்டவரிடத்தில் கொண்டு வந்து இன்னும் அதிகமாக அவரை நம்புவோம் நாம் அளவுக்கு அதிகமாக சோதிக்கப் படும்பொழுதும், சோர்ந்துபோகும் நிலைக்கு வரும்போதும் நாம் நமது சுயம், சுயபெலன் ஆகியவற்றின் முடிவுக்கு வந்துவிடுகிறோம். இதுதான் தேவனு டைய வல்லமை அவரது உத்தமம் ஆகியவை வெளிப்பட ஏற்ற காலம். 2 கொரி.1:8-10. "தேவன் நமது பிள்ளை களை மனதார கடினமான சூழ்நிலை களில் வைப்பதால் அவர்கள் வேறு விதத்தில் அவரைக் கண்டுகொள்ள முடியாத விதத்தில் அவர்கள் அவரைக் கண்டுகொள்ளச் செய்கிறார்" என்று ஹட்சன் டெய்லர் கூறியுள்ளார். எனவே "அழுத்தம் எவ்வளவு பெரியது என்பது காரியமல்ல, அழுத்தம் எங்கே இருக்கிறது என்பதுதான் காரியம். உங்களுக்கும் தேவனுக்குமிடையில் அழுத்தம் வரா மலிருக்கட்டும். அழுத்தம் அதிகரிக்கும் போது அது உங்களை தேவனுடைய மார்புக்கு நேராகவே அழுத்தும்.

நெருங்கிச் சேர்வதின் பயன்கள்

(எபி.10:22-23 வசனங்கள்)

நமது கண்களையும் இருதயத் தையும் கர்த்தருக்கு நேராக தொழுகை மூலம் திருப்பும்போதும், ஜெபம், வேதவாசிப்பு இவைகளில் வளரும் போதும் அவரே நமது ஜீவன், சமாதானம், பெலன், சந்தோஷம், உதவி, நம்பிக்கை யாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிறா ரென்றும் அவரும் அவரது கிருபையும் நமக்குப் போதுமானவைகள் என்றும் கண்டு கொள்வோம்.

புது விசுவாசம் (Fresh faith) என்ற தமது நூலில் ஜிம் சிம்பாலா "தேவனுடைய சமூகத்தில் தரித்திருந்து, அவரை நேசிக்க சமயம் எடுத்து அவரது சத்தத்தைக் கேட் பதன் மூலம் விசுவாசம் போஷிக்கப்படு கிறது. ஆண்டவரை ஆராதிக்கும் போதே தொடர் விசுவாசம் நம்மில் பாய்ந்து வருகிறது. வேத வசனத்தின் வாக்குத்தத் தங்கள் உயிரூட்டமுள்ளவைகளாக ஆவியானவரால் நமது உள்ளங்களில் பதிக்கப்படுகின்றன" என்று எழுதுகிறார். காத்திருப்பதன் மூலம் விசுவாசம் நம்மில் முளைத் தெழும்புகிறது.

எரேமியாவின் வாழ்வில் மிகப் பெரிய துன்பமும், புலம்பலும் ஏற்பட்டு அவனது பெலனும் நம்பிக்கையும் அற்றுப்போனபோது அவன் தேவனுக்கு நேராகத் தனது கவனத்தைத் திருப்பி நம்பிக்கையை மறுபடியும் தூண்டி எழுப்பினான் (புல.3:21-25).

எனவே சோதனைகளின் போது நமது முழு கவனத்தையும் ஆண்ட வருக்கு நேராகச் செலுத்தி, அவரது பிரசன்னத்தில் காத்திருந்து அவரையும் அவரது வார்த்தைகளையும் விசுவாசிப் பதே மிக முக்கியமானது சங்.31:14,15 வசனங்களில் "நானோ கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன், நீரே என் தேவன் என்று சொன்னேன். என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" என்று சங்கீதக்காரன் கூறுகிறார். நாம் சந்திக்கும் சோதனைகள் மூலம் தேவன் நன்மை செய்கிறார் என்றும் ஏற்ற வேளையில் விடுதலை தருவார் என்றும் நம்புகிறோமா? (ரோ.8:28; சங்.91:15). அவர் நம்மை விசாரிக்கிறவராயிருக்கிற படியால் நமது கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுகிறோமா? 1 பே.5:7. "கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்"

(4-ம் பக்கம் பார்க்க)

உறுதியான விசுவாசம் தேவன் எல்லாவற்றிற்கும் போதுமானவர் என்பதை உணரக்கூடியது

Strong faith realizes the all sufficiency of God

Charles H.Spurgeon

"..... நான் சர்வ வல்லமையுள்ள தேவன் " ஆதி.17:1

உறுதியான விசுவாசம் தன்னை சர்வ வல்லவர் அல்லது எல்லாவற்றிற்கும் போதுமானவர் என்று சொல்லுகிற தேவன் மீது சார்ந்து கொள்ளுகிறது. இதுவே உறுதியின் இரகசியம். இந்த விசுவாசம் மறைந்திருக்கும் மன்னாவைப் புசித்து வலுவடைகிறது. ஆண்டவர் தனது திட்டங்களை நிறைவேற்றும் வலிமையில் போதுமானவர். நமக்குப் புதிர் போலத் தோன்றும் கடினங்களில் வழிகாட்ட தமது ஞானத்தை அளிக்கிறார். அவர் அன்பில் போதுமானவர். அவர் நம்மைத் தமது இரக்கத்தால் அரவணைக்கிறார். தேவன் சகலத்திற்கும் போதுமானவர். அது சொல்லவும் கேட்கவும் எளிய சத்தியமாயிருந்தாலும் அளவிடமுடியாத இரகசியம். ஆனால் அதனைப் பற்றிக் கொண்டு அதிலே வாசம் செய்தால் நம்முடைய முழுமையான நடக்கையிலும் ஆச்சரியமான தாக்கம் ஏற்படும்.

இந்த வார்த்தை தற்கால சரீர பிரகாரமான துன்பத்தால் நடுங்குகிற ஒருவருக்கு பயனளிக்கிறது. வரப்போகிற ஒரு சம்பவத்தால் பயந்து கொண்டிருக்கலாம். அந்த சோதனை வரும் என்று எண்ணி பயந்து கொண்டிருக்கலாம்."ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது" யோபு.5:19 என்ற வாக்கை அறிந்தும் நடுங்குகிறீர்கள். "நான் சகலத்திற்கும் போதுமான தேவன்" என்கிற அவர் மரண இருளின் பள்ளத்தாக்கிலும் கடந்து செல்ல உதவுவார். தேவ பிள்ளையே, ஏன் பயப்பட வேண்டும்? அவரால் கொடுக்கமுடியாத

(3-ம் பக்க தொடர்ச்சி)

சங்.55:22 என்ற நம்பிக்கை உண்டா? ஒன்றைக் குறித்தும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் ஜெபத்தின் மூலம் தேவனுக்குத் தெரியப்படுத்துகிறோமா? பிலி.4:6. சுயபுத்தியின்மேல் சாயாமல் முழு நம்பிக்கையுடனும் அவரை சார்ந்து வாழுகிறோமா? நீதி 3:5. நமது வழிகளிலெல்லாம் அவரை நினைத்து அதனால் நமது பாதைகள் செவ்வைப்படுத்தப்படுகிறதா? வச.6. கர்த்தர் உத்தமர். நாம் முற்றிலும் அவரை சார்ந்து அவர் தமது வாக்கை நிறைவேற்றுவார் என நம்புவோம். அவரை நாம் கிட்டிச் சேர்ந்தால் அவர் நம்மைக் கிட்டி சேருவார் யாக்.4:5.

"சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர். கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ஆதலால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள் சங்.9:9-10.

ஒன்றுமில்லை. அவரால் வெற்றிபெற முடியாத சத்துருவுமில்லை.

உள்ளான தொல்லைகள்

நாம் ஆவிக்குரிய அழுத்தங்களிலிருந்தாலும் அவர் சர்வ வல்லவராக செயல்படுகிறார். சரீர சோதனைகளை விட உள்ளான தொல்லைகள் அடிக்கடி மிகவும் கொடியவை. நாம் உள்ளே பார்த்து தெய்வீகக் கிருபை நம்மில் பெலவீனமாயிருப்பதைக் காணலாம், அல்லது அப்படித் தோன்றலாம். நமது இயற்கையான குறைபாடுகளைத் தெளிவாகக் கண்டு அதினால் கலங்குகிறோம். நமது கடமைகளில் நிர்விசாரம், பயபக்தியில் குறைவு, பயன்படவேண்டிய தருணங்களை விட்டுவிட்டது போன்றவை நம்மை குற்றப்படுத்துகின்றன. அப்போது நாம் உண்மையாகவே ஆண்டவரை அறிந்தவர்கள் தானா? என்ற சந்தேகம் மேலிடுகிறது.

இந்நிலையில் சாத்தானும் நம்மைக் குற்றப்படுத்தும்போது சில நொடிகள் அவன் காலில் விழுந்து விடுகிறோமா? வேண்டாம் இத்தகைய கொடிய சமயங்களிலும் தேவன் மேல் சந்தேகம் கொள்ள வேண்டாம். அவர் இன்னும் எல்லாவற்றிற்கும் போதுமானவர். நமது இரட்சிப்பு அவருடைய புயத்தை சார்ந்திருந்தால் அந்தப் பிணைப்பு முறிவதில்லை. ஏனெனில் அவரது இருதயம் மாறாதது. அவரின் மாறாத அன்பு குறைவதில்லை. ஏன் நாம் அதைரியமடைய வேண்டும்? அவர் சர்வ வல்லவராயிருப்பதால் சாத்தானைப் பார்த்து, "என் சத்துருவே எனக்கு விரோதமாய் சந்தோஷப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்" மீகா.7:8 என்று சொல்ல முடியும்.

தொல்லைகளும் துயரங்களும்

சரீர தொல்லைகளும் ஆவிக்குரிய துயரங்களும் ஒரே வேளையில் வந்தாலும் இந்த இரு சமுத்திரங்களும் இணைந்து கப்பற்சேதத்தை ஏற்படுத்திவிடும் என அஞ்சவேண்டாம். ஏனெனில் கடலின் மேல் நடந்து வந்த ஆண்டவர் 'நான் உனக்கு இப்போதும் எல்லாவற்றிற்கும் போதுமானவர்' என்று சொல்லி கட்டுப்படுத்துவார். அவர் அவிழ்த்துவிடாத எந்த ஆவியும் நரகத்தின் ஆழத்திலிருந்து எழும்பி வருவதில்லை. அவனைச் சங்கிலியால் கட்ட அவரால் முடியும். யெகோவா காற்றின் செட்டைகளில் பறந்து வருகிறார். புயல் காற்றின் மேகம் அவரது வாகனம்! பயப்படவேண்டாம். உங்கள் பரமபிதாவின் வாகனத்தின் சக்கரத்தின் ஓசை கேட்கிறது. புயலின் மத்தியில் அவர் நல்லாட்சி புரிகிறார். அவரது நிலையின் மேலுள்ள விதானத்தின் இருளாலும் அவரது கண்களிலிருந்து வரும் மின்னல் பிரகாசத்தாலும் பயப்பட வேண்டாம். அவரை எக்காலத்திலும் நம்பலாம். எந்த பயமும் அவிசுவாசத்திற்கு நேராக நடத்தி உங்களைக் கெடுத்து அவரது நாமத்திற்கு அவமரியாதையைக் கொண்டு வரக் கூடாது.

மரணத்திலும் நித்தியத்திலும்

சரீரம் பெலவீனப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தாலும் அவர் எல்லாவற்றிற்கும் போதுமானவர். வாழ்வினில் சர்வ வல்லவராயிருந்தவர் மரணத்திலும் போதுமானவர். கிருபையின் தேவன் நித்தியத்தின் அனைத்து இரகசியங்களிலும் போதுமானவர். நியாயத்தீர்ப்பின் முழக்கத்திலும், பழி வாங்குதலின் பயங்கரங்களிலும் நரகத்தின் பயத்திலும் அவர் போதுமானவர். அவர் அழிந்துபோகும்படி உலகங்களுக்குக் கட்டளையிட அவை நொறுங்கிப்போகும். நித்தியவாசியாகிய இரட்சகர் கடைசிவரை இரட்சிக்கவும் அனைத்தும் கடந்து போனாலும் உங்கள் ஆவியைத் தாங்கவும் போதுமானவராகவும் இருக்கிறார். எல்லாம் அழிந்தாலும் சர்வ வல்லவரை நம்புகிற மனிதன் பயப்பட வேண்டியதில்லை.

நமது நம்பிக்கையின் கன்மலை

தேவன் மேலுள்ள நம்பிக்கை உங்கள் புயத்தில் முத்திரையாக இருந்து உங்களை பலப்படுத்துவதாக. அது உங்கள் சந்தேகமாகிய கல்லறையின் மீது புரட்டி வைக்கப்பட்ட கல்லாக இருக்கட்டும். சந்தேகம் எழும்பி வரவே கூடாது! ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கும் நீங்கள் சந்தேகப்படவே கூடாது. மாறுகிற மனிதன் மீதோ இன்று நேசித்து நாளை வெறுக்கிற ஒரு சிருஷ்டியையோ நீங்கள் நம்பினால் துக்கமடைய காரணமுண்டு. ஆனால் தேவ அன்பு நித்தியமானது. அவரது வல்லமை முடிவில்லாதது. ஏன் பயப்பட வேண்டும்? உங்கள் ஆத்துமாவின் நம்பிக்கை அசையாத கன்மலையும் எல்லாவிதத்திலும் போதுமானவராகிய தேவன் மேலிருக்கிறதே.

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் ..... அவனைத் தப்புவித்து அவனை கனப்படுத்துவேன்" சங்.91:14-15.

என் ஆத்துமாவே ஏன் கலங்குகிறாய். தேவனிடத்தில் நம்பிக்கையாயிரு. மனுஷர் மேலுள்ள நம்பிக்கையை விட்டுவிடு. நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்பவேண்டாம்! அப்பொழுது உன் வெளிச்சம் காலையை போல பிரகாசிக்கும். பரலோக பனி இறங்கி நீ பூத்துக்குலுங்கி மகிழ்ச்சியாயிருக்கப் பண்ணும். நீதிமான்களே கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருங்கள். நேர்மையான இருதயமுள்ளவர்களே, ஆனந்த முழக்கமிடுங்கள். அவர் உங்களிடம்தான் பேசுகிறார். அவர் நம்பிக்கையின் கன்மலை. "நான் சர்வ வல்ல தேவன்."

விசுவாசமும் அதன் சகிக்கும் வலிமையும்

Faith and its power of endurance

Andrew Murray

வேதபகுதி : எபிரேயர் 11:35-38

விசுவாசம் இரட்டை வெற்றியை தரும். ஒரு புறமாக விசுவாசம் எதிரியை மேற்கொள்ளும், அல்லது எதிரி அல்லது கஷ்டத்தை நீக்கும் அல்லது அழிக்கும். மற்றொரு புறம் தொல்லையிலிருந்து விடுதலையில்லாவிட்டாலும் விசுவாசம் சகிப்பதற்கான வலிமையைப் பெற்று மனிதனோ, பிசாசோ செய்யக்கூடிய எல்லாவற்றிற்கும் மேலான ஆவியை யுடையதென நிரூபிக்கிறது. எதிரியின் பயமுறுத்தலுக்குப் பயப்படாமலி ருப்பது, விடுதலை பெறாதவர்கள் வாழ்வில் காணப்படும் விசேஷித்த விசுவாச வெற்றி. இங்கு பாடுகளின் மத்தியில் தங்கள் விசுவாசத்தை நிரூபித்து உலகிலுள்ள பயமுறுத்தும் அனைத்து வேதனைகளின் மத்தியிலும் உயர்த்தப் பட்ட சிலரைக் குறித்து சிந்திப்போம். அவர்கள் பாடுகளுக்குட்படுத்தப்பட்ட போது விடுதலையை விரும்பவில்லை. ஏனெனில் ஒரு நல்ல உயிர்த்தெழுதலை அவர்கள் எதிர்பார்த்தனர். ஆவிக்குரிய நித்திய உண்மைகள் விசுவாசத்தின் மூலம் அவர்களுக்கு தெளிவாகவும் அருகாகவும் இருந்தபடியால் இக்கால பாடுகள் வரப் போகும் மகிமைக்கு ஒப்பானதல்ல என அறிய முடிந்தது. விசுவாசத்தின் வெற்றி ஒரு தற்கால தோல்வியை வெற்றியாகக் கருதக்கூடியது.

இந்த தேவ பிள்ளைகளில் பெண்கள், தலைவர்கள், இரத்த சாட்சி கள், உலகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோர் அடங்குவர். இவர்களில் தேவன் பரலோக விசுவாச அழகைக் காண்கிறார். அது தேவனைக் கனம் பண்ணுவதாயிருக்கிறது. அவரது சித்தத்தை நிறைவேற்றுவதாகவும், அவரது நீதிக்கு ஏற்றதாகவுமிருக்கிறது. விசுவாசத்தின் மூலம், அவர்கள் தேவனை யும் அவருக்குப் பிரியமானவைகளையும் சந்தோஷமாக எண்ணினபடியால் அதனைப் பெற எல்லாவற்றையும் விட்டு விட ஆயத்தமாயிருந்தனர். விசுவாசத்தி னால் அவர்கள் தங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தின் பொருட்டு பரலோக இன்பங்களை எண்ணி இவ்வுலக இன்பங்களை அற்ப மாக எண்ணினர். சத்தியத்திற்காக பாடு படுவது உயரியதும் மேன்மையானது மான விசுவாச பயிற்சியாகும். பாடுகள் மூலமாக வரும் ஆசீர்வாதம் மிகவும் உன்னதமான ஒரு ஆசீர்வாதமாகும்.

தேவன் இந்த முன்மாதிரிகளை நமக்கு முன் வைத்து அவர்கள் விசுவாசத்தின் மூலம் வெற்றி பெற்றது போல நமது குறைவான சோதனைகளில் நாம் எப்படி விசுவாசத்தில் முன்னேற வேண்டும் என போதிக்கிறார். அவர் களது விசுவாசம் அசாதாரணமானது. அவர்களது பாடுகள் நம்மை பலப்படுத்த வேண்டும். நமது பாடுகள் சாதாரண மானவை. அனுதினவாழ்வின் சிறிய சாதாரண சோதனைகளில் விசுவாசி இந்த பரிசுத்தவான்களின் அடிச்சுவடு களைப் பின்பற்ற வேண்டும். அவர்கள் மிகப்பெரிய தலைவராகிய நமது இரட்சகரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றினார்கள். விசுவாசத்தின் மூலமாக மட்டுமே சிறிய பெரிய பாடுகளை நாம் சகித்து தேவநாமத்திற்கு மகிமையையும் நமக்கு நன்மையையும் கொண்டுவர முடியும்.

ஆம் விசுவாசத்தின் மூலமாகவே இவைகளைச் செய்ய முடியும். விசுவாசம் பாடுகளை தேவனுடைய வெளிச்சத்திலும், நித்தியத்தின் கண் ணோட்டத்திலும் பார்க்கிறது. பாடு களால் வரும் சிறிய வேதனை, நித்திய இலாபம். ஆத்துமாவைத் தாக்க இய லாய்மை, ஆத்துமாவை பரிசுத்தப்படுத்தி ஆசீர்வதிக்கும் வலிமை ஆகியவை தென்படுகின்றன. பாடுகளை அனுமதிக் கிற தேவனை விசுவாசம் நோக்கிப் பார்க்கிறது. அவர் நம்மை நெருப்பில் புடமிடும்போதும், நம்மை தூய்மைப் படுத்தும்போதும் அவர் நமக்கு உதவி யாகவும், பெலனாகவும் ஆறுதல் செய்கிற வராகவுமிருக்கிறார். தேவ குமாரனைப் போன்ற குணாதிசயத்தை உருவாக்கவும் எவ்வகையிலும் பிதாவின் சித்தத்தையும் கனத்தையும் பாதுகாக்கவும் விசுவாசம் ஏதுவாகிறது. அவருடைய தூய்மையில் பங்காளிகளாகவும் தேவ ஆட்டுக் குட்டியின் தாழ்மை எளிமை ஆகியவை நம்மில் வரவும், பாடுபடுவதில் பூரணமாக அவரைப் போலாகவும் விசுவாசம் ஏதுவாகிறது. பயங்கரமான பாடுகளின் மத்தியிலும் விசுவாசத்தின் மூலம் நாம் முற்றிலும் ஜெயம் கொள்ள முடியும்.

தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறீர்களா? பாவத்தையும் உலகத் தையும் உங்களால் மேற்கொள்ள முடியுமா? நீங்கள் பரிசுத்தமாகவும் பூரணமாகவும் நித்திய உலகத்தின் சுதந்தரவாளிகளாகவும் வாழ வேண்டுமா? அப்படியானால் விசுவாசத்தோடு வாழுங்கள். எந்த சோதனையையும் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் உற்சாகத்தின் ஆவியோடு சந்தியுங்கள். அப்போது ஒவ்வொரு சோதனையும் இன்னும் அதிக சோதனைகளை சந்திக்கவும், தேவனிடத்தில் அதிகமாக நெருங்கவும், தேவ பிரசன்னத்தில் அதிக மாய் நெருங்கிச் சேரவும் ஏதுவாகும்.

விசுவாசத்தின் பொறுமை

The patience of faith

C. Judd Montgomery

"நீங்கள் தேவனுடைய சித்தத் தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதா யிருக்கிறது" *எபி.10:36.*

"அந்தப்படியே அவன் பொறு மையாயிருந்து, வாக்குத்தத்தம் பண்ணப் பட்டதைப் பெற்றான்" *எபி.6:16.*

தேவனுடைய வாக்குத்தத்தங் கள் நிறைவேற அன்பாகக் காத்திருக்கும் மக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு. உலகத்தை ஜெயிக்கும் விசுவாசம் இதற்கு மிகவும் தேவை என்று நாமறிவோம்.

அதிக விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் நமது விசுவாசத்தை சோதிக்கவும் அவரது அழகிய பொறுமையை நமது ஆத்து மாவுக்குக் கொண்டுவர முயற்சிக்கும் போது நாம் முறுமுறுத்து நமது விசுவாசம் தளர்ந்து போகச் செய்கிறோம்.

விசுவாசத்தினாலும், பொறுமை யினாலும் முற்கால பரிசுத்தவான்கள் வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொண் டார்கள். நாம் அவர்களைப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம். *எபி.6:12.* ஆபிரகாமின் மிகப்பெரிய விசுவாசம் வேதபுத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. அது நமது சந்தேகமுள்ள இருதயங் களுக்கு ஆச்சரியமளிக்கிறது. ஆயினும் அவனுடைய அற்புதமான பொறு மையைக் குறித்து நாம் சிந்தித்ததுண்டா? பொறுமையோடு சகித்து அவன் வாக்குத்தத்தத்தைப் பெற்றான்.

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது தேவ ஆவியால் போதிக்கப்பட்டு கர்த்தருக்குக் காத்தி ருந்தான். கீழ் குறிப்பிடப்படும் வசனங் களில் அவன் மறுபடியும் மறுபடியும் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இரட்சிப்பின் கன்மலையாகிய இயேசு வுடனிருந்தான் என வெளிப்படுத்துகிறான்.

சங்.62:1,5; சங்.35:20; சங்.130:5,6; சங்.27:13,14; சங்.40:1.

அனேக களைப்படைந்த ஆத்து மாக்களின் ஜெபங்கள் கேட்கப்படாமலே திரும்பி வந்தது போல காணப்படு கின்றன. அவர்கள் இருதயங்கள் ஆரோக்கியமின்றி நம்பிக்கையின்றி காணப்படுகின்றன. இஸ்ரவேலில் அதைரியமடைந்த ஒரு ராஜா "நான் இனிக் கர்த்தருக்காகக் காத்திருக்க வேண்டிய தென்ன?" என்றது போல இவர்களும் சொல்ல ஆயத்தமாகின்றனர் *(2 ராஜா.6:33).*

தைரியம் குன்றினவர்களே, பொறுமையற்ற குழப்பங்களை விட்டுவிட்டு இயேசுவின் நாமத்தில்

விண்ணப்பம் செய்தபின் விசுவாச பொறுமையுடன் அமைதியாயிருங்கள். இரக்க ஆசனத்திலிருந்து பதில் வர அமைதியாக எதிர்பார்ப்புடன் காத்திருங்கள்.

உங்கள் விசுவாசத்தின் சோதனை பொறுமையைக் கொண்டு வரும். காத்திருக்கும் காலம் பிதாவின் மகிமைக் கேதுவான விலையேறப்பெற்ற கனியை உருவாக்கும்.

சரீர வியாதி, பெலவீனத்தோடிருக்கிறவர்கள், ஜீவனுள்ளோர் தேசத்தின் நன்மையை எதிர்பார்க்கிறார்கள். "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலனடைவார்கள்". அவர்களுடைய முந்திய பலம் திரும்பிவருவது மட்டுமல்ல தேவ ஆவியானவரின் உயிரூட்டுதலால் மாம்ச சரீரம் வாழ்வின் முழுமையை அனுபவிக்கும். 'கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்' ஏசா.40:31.

இவ்வாறு தேவனுக்காகக் காத்திருப்பது எல்லா எதிர் சூழல்களிலும் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படும் என்பதையும் உறுதியான விசுவாசம் கிறிஸ்துவின் முடிவுற்ற கிரியையை அறிவிக்கிறது என்றும் விளங்குகிறது.

நாம் விசுவாசத்தோடு பொறுமையாயிருக்க வேண்டிய நிலை வரும்போது அவிசுவாசத்தின் நிர்விசாரத்திற்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும். "உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவு பரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்" எபி.6:12.

பழைய ஏற்பாட்டுக் காலத்தின் தேவனுடைய போராட்ட வீரர் ஒருவர் கூறியது போல ".....தேவனாகிய கர்த்தாவே எங்களுக்குத் துணைநில்லும், உம்மை சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம். கர்த்தாவே நீர் எங்கள் தேவன்" 2 நாளா.14:11.

"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கிய வான்கள்" ஏசா.30:18.

பெருந்துன்பத்தின் ஆசீர்வாதம்

The blessing of affliction

J.C. Ryle

வேதபகுதி : மத்.15:21-28

ஒரு கானானிய ஸ்திரீ தனது மகளுக்காக ஆண்டவரிடம் மன்றாடுகிறாள். "ஆண்டவரே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப் படுகிறாள்."

இந்தப் பெண் அதிகமாக சோதிக்கப்பட்டாள். அவளது அன்பான குமாரத்தி பிசாசினால் பிடிக்கப்பட்டு விடுதலையின்றி இருந்தாள். ஆயினும் அந்தத் தொல்லை அவளை இயேசுவிடம் கொண்டுவந்தது. அவள் ஜெபிக்கக் கற்றுக் கொண்டாள். இல்லாவிடில் அவள் அறிவீனத்தில் வாழ்ந்திருப்பாள். இயேசுவைக் காணும் வாய்ப்பையும் இழந்திருப்பாள். அந்தத் தொல்லை அவளுக்கு நன்மைக்கு ஏதுவாக முடிந்தது சங்.119:71.

நமது தொல்லைகளில் நாம் பொறுமையிழக்கக் கூடாது. ஒவ்வொரு சிலுவையும் தேவனிடமிருந்து நமக்கு வரும் செய்தி என்று கொள்ளவேண்டும். இறுதியில் அது நன்மையைத் தரும். சோதனைகள் நமது சிந்தனையைத் தூண்டி, உலகிலிருந்து பிரிந்து, வேதத்தை வாசிக்கவும், முழங்காற்படியிடவும் தூண்டுகின்றன. ஆரோக்கியம் நல்லதுதான். ஆனால் சுகவீனம் நம்மை ஆண்டவருக்கு நேராக நடத்துமானால் அது மிகவும் நல்லது. வாழ்வில் வளம் பெறுவது ஒரு பெரிய கிருபை. ஆனால் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் எதிரிடைகள் அதைவிட மேலானவை. கவலையீனமாகப் பாவத்தில் வாழ்ந்து மரிப்பதை விட வேறு எதுவுமே மேலானது. பலமுறை பெருந்தொல்லைகளுக்குள் அகப்பட்டு கிறிஸ்துவைத் தேடி ஓடுவது, சொகுசாக வாழ்ந்து நம்பிக்கையின்றி மரிப்பதை விட பன்மடங்கு மேலானது லூக்.12:20.

ஜெபத்தில் தரித்திருங்கள்

நாம் ஜெபத்தில் தரித்திருப்பது நமக்கும் பிறருக்கும் பயனுள்ளது. மேற்கூறப்பட்ட வேபகுதியில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பெண்ணின் வேண்டுதல் முதலாவது கவனிக்கப் படாதது போலிருந்தது. இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஆனால் அவள் தொடர்ந்து ஜெபித்தாள். ஆண்டவரின் வாயிலிருந்து பிறந்த வார்த்தைகளோ அதைரியமடையச் செய்யக் கூடியவைகளாயிருந்தன. "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படியல்ல". அதற்கு அவள் 'ஆண்டவரே எனக்கு உதவி செய்யும்' என்று கதறினாள் முந்திய பதிலைவிட இப்போது பதில் மிகவும் கடினமாக இருந்தது. 'பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல.' 'நெடுங்காலமான காத்திருப்பு அவள் இருதயத்தை இளைக்கப் பண்ணவில்லை' நீதி.13:12. அவளை இந்தப் பதில் அமைதிப்படுத்த முடியவில்லை. 'துணிக்கைகளுக்காக' கெஞ்சுகிறாள். அவளது விடாப்பிடியான வேண்டுதல் பலனளித்தது. 'ஸ்திரியே உன் விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது'. 'தேடுங்கள் கண்டடைவீர்கள்' மத்.7:7.

நாமும் ஜெபிக்கும்போது இதனை நினைவுபடுத்துவோம். நாம் சில வேளைகளில் ஜெபத்திற்குப் பதில் பெறாதபடியால் அதனை விட்டுவிடுகிறோம். இந்த சோதனையை விட்டு விடுவோம். இது சாத்தானிடமிருந்து வருகிறது. எனவே விசுவாசத்துடன் ஜெபிப்போம். நமது பாவ நிலைக்கெதிராகவும், லௌகீக ஆவிக்கெதிராகவும், பிசாசின் தந்திரங்களுக்கெதிராகவும் சோர்ந்து போகாமல் ஜெபிப்போம். கடமை செய்யவும், சோதனைகளை சகிக்கும் கிருபைக்காகவும், கஷ்டங்களில் ஆறுதலுக்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம். **நாம் முழங்காலில் செலவிடும் சமயம் போன்ற விலையேறப்பெற்ற சமயம் வேறில்லை.** ஜெபம் கேட்கப்படும். அவரது ஏற்ற வேளையில் நமக்கு பதில் தரப்படும்.

பிறருக்காக மன்றாடுங்கள்

பிறருக்காக ஜெபிக்கும்போது மேற்கூறிய சம்பவத்தை நினைவில் வைத்துக் கொள்வோம். நமது பிள்ளைகளின் மனமாற்றத்தை விரும்புகிறோமா? நமது நண்பர்கள், உறவினரின் இரட்சிப்புக்காகக் கவலையோடிருக்கிறோமா? இந்த கானானிய ஸ்திரீயை எண்ணி ஜெபிப்போம். இரவும் பகலும் அவர்களுடைய பெயரைச் சொல்லி ஜெபிப்போம். பதில் கிடைக்கும் வரை இளைப்பாற வேண்டாம். ஒருவேளை பதில்வர பல வருடங்களாகலாம். வீணாகவே நாம் ஜெபிப்பதாகத் தோன்றலாம். ஆனாலும் விட்டுவிட வேண்டாம். இயேசு மாறாதவர். அன்று கானானிய ஸ்திரீயின் ஜெபத்தைக் கேட்டவர் நமது ஜெபத்தையும் கேட்பார். சமாதானம் நிறைந்த பதிலைத் தருவார்.

முக்கிய அறிவிப்பு

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவுசெய்து உடனே எங்களுக்கு தெரிவியுங்கள். இது நீங்கள் எங்களுக்கு செய்யும் பெரிய உதவியாகும்.

அக்கினியில் தேவனை மகிமைப்படுத்துதல்

Glorifying God in the fire

George Whitefield

அக்கினி எரிப்பதும், சுத்திகரிப் பதும் மட்டுமல்ல அது ஒரு பொருளை இன்னொன்றிலிருந்து பிரித்துவிடுகிறது மாயிருக்கிறது. சர்வ வல்ல தேவன் நல்ல ஒரு சோதனையின் மூலம் ஒரு மணி நேரத்தில் சோதிக்கப்படுவது போல ஆயிரக்கணக்கான அவரது அன்பின் வெளிப்பாட்டின் மூலம் சுத்திகரிக்கப்பட முடிவதில்லை என்று அறிவார். துன்ப மாகிய சூளையிலிருந்து சுத்திகரிக்கப் பட்டு, மன்னிக்கப்பட்டு வெளிவருவது நல்லது . விலையேறப்பெற்றதை அசுத்தத் திலிருந்து பிரித்தெடுக்கவும், பதரை கோதுமை மணியிலிருந்து பிரிக்கவும் வேண்டும். இதைச் செய்ய தேவன் ஒரு அக்கினிக்குப் பின்னால் இன்னொரு அக்கினியில் நம்மைப் போடுகிறார்.

இவ்வாறு அக்கினிக்குள் போடப் படுமுன் கிறிஸ்தவனாயிருப்பது நல்லது என்று எண்ணுகிறோம். 1 பேது.4:12-ல் பேதுரு "உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமை யென்று எண்ணவேண்டாம்" என்கிறார். நான் செய்ய வேண்டிய தென்ன? அக்கினியின் நடுவிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். "ஆகையால் கர்த்தரை, வெளுக்குந் திசையிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தைச் சமுத்திரத் தீவுகளிலும் மகிமைப்படுத்துங்கள்" ஏசா.24:15.

சிலுவையினடியில் நாம் வரும் போது அவரது கிருபையைப் பெற்று, அவரை கனவீனப்படுத்தாமலிருப்பது தான் அவரை மகிமைப்படுத்தும் விதம். எனவே நெருப்பில் நாம் வைக்கப்படும் போது அமைதியாக அதனை ஒரு சுத்தப் படுத்தும் செயலாக ஏற்றுக்கொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

தேவன் நம்மை அக்கினியிலிடும் போது அவர் நம்மை நமது நன்மைக் காகவும் அவரது மகிமைக்காகவும் இதைச் செய்கிறார் என்று விசுவாசிக்கும்போது தான் அவரை மகிமைப்படுத்த முடியும்.

"என்னிலுள்ள அழுக்கு நீங்கும் வரை அக்கினியை அணைக்க வேண் டாம் ஆண்டவரே" என்று நாம் கூறினால் தேவனை மகிமைப்படுத்துகிறோம். "தேவனே நான் இதோ இருக்கிறேன், உமது பார்வைக்கு நலமானபடி செய்யும்" என்று சொல்லுவோம்.

நான் புடமிடப்படும்போது, "தேவன் என்னிடம் எதைச் செய்கிறார் என்பதை இப்போது நான் அறியேன்; பின்பு அதை அறிந்து கொள்வேன்" என்று திருப்தியுடன் சொல்லவேண்டும். தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும்.

முறுமுறுக்காமல் இருந்தால் தேவனை மகிமைப்படுத்த முடியும். அவரது சித்தத்திற்குத் தாழ்மையுடன் நம்மை ஒப்புவிக்க வேண்டும். தாழ்மை யின் ஆவி பிடிவாதமுடனிருப்பதில்லை. தனது பிள்ளைகளின் துர்ச்செய்தியைக் கேட்ட ஏலி, "அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்றான் 1 சாமு.3:18.

அக்கினியின் மத்தியில் தேவனைப் புகழ்ந்து பாடுவோமானால் நாம் தேவனை மகிமைப்படுத்த முடியும். இஸ்ரவேல் புத்திரர் தேவனைப் புகழ்ந்து பாடினார்கள். சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ என்ற மூவரும் அக்கினியில் துதித்தனர். கர்த்தரின் சகல கிரியைகளே அவரைப் பாடி துதியுங்கள்.

"உபத்திரவம் பொறுமையை யும், ... உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்" ரோ.5:3,4. சுருக்கமாக கூறினால் நாம் சாந்தமும், தாழ்மையும் உள்ளவர்களாகவும், நம்மை அதிகமாகச் சாராமலும், நமது சொந்த பெலவீனங்களையும் தேவனுடைய சர்வ வல்லமையையும் கிருபையையும் உணர வேண்டும். அப்போதுதான் சோதனை யில் தேவனை மகிமைப்படுத்த முடியும். நமது வாழ்வினைத் திரும்பிப் பார்த்து, 'தீயிலும் நான் தேவனை மகிமைப்படுத்த முடிந்தது' என்று கூறமுடியும்.

பரிபூரண சமாதானத்துடன் வாழுங்கள்

Stay in perfect peace

Dave Butts

"உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன், உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" ஏசா.26:3.

பூரண சமாதானம் கூடாது என்று தோன்றுகிறது. நம்மை சுற்றிலும் உலகில் நடைபெறும் சம்பவங்கள், நம்மிலுள்ள எண்ணங்களின் குழப்பங்கள் ஆகியவை இந்த வாக்குத்தத்தம் நிறைவேற முடி யுமா என்று ஆச்சரியப்படச் செய்கின் றன. ஆனால் இவ்வாக்குறுதியை அளித்தவர் தேவன். அதனால் இந்த வாக்கு ஒரு முழுமையான புதிய ஒளியில் தரப்படுகிறது. நாம் பரிபூரணம் என்றால் என்ன என்பதையும் அறியச் செய்கிறது. பரிபூரணம் என்பது வேதத்தின் அடிப் படையில் முதிர்ச்சியையும், முடிவு பெறும் நிலையையும் குறிக்கிறது. தேவன் நீங்கள் முதிர்ச்சியடைந்த சமாதானத்தோடு உங்கள் வாழ்வில் காணப்படவும், அதே நிலையில் உங் களைக் காத்துக்கொள்ளவும் விரும்புகிறார்.

"நீர் அவர்களைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்"

ஏசாயா தீர்க்கர் இந்த வாக்கு எப்படி நடைமுறையில் செயல்படுகிறது என்பதின் உட்பார்வையை விளக்கு கிறார். முதலும் முக்கியமுமான பங்கு இதில் தேவனுக்குரியது. தேவன் நம்மைப் பரிபூரண சமாதானத்துடன் காக்க ஒத்துக் கொள்கிறார். சமாதானம் தேவனுடைய ஈவு. அதை நாம் கிரியைகளால் பெற முடியாது. இயேசு இதனை தம்மிட மிருந்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவரை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதுள்ளவர்களுக்கு

தேவன் நம்மைப் பரிபூரண சமாதானத்துடன் வாழவைக்க நம் முடைய பங்கும் வேண்டும். நமது மனம் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். நமது இருதயத்தின் சிந்தனை களை கிறிஸ்துவில் நிலைப்படுத்த வேண்டும். எதைக் குறித்து சிந்திக்கிறீர் கள்? உங்கள் மனது எதில் நிலைத் திருக்கிறது? நமது எண்ணங்கள் ஆண்டவரை விட்டு சிதறிக்கொண்டி ருந்தால் அதில் சமாதானம் நிரப்பப்பட முடியாது. அவரே சமாதான காரணர். மறுபடியும் மறுபடியும் நாம் நமது இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டு மென்று கட்டளை பெற்றுள்ளோம். நாம் சிந்திக்கிறவைகளைக் குறித்து ஜாக்கிரதை வேண்டும். தேவனையே மையமாகக் கொண்ட ஒரு இருதயத்தில் மட்டுமே சமாதானம் வரமுடியும்.

உம்மையே அவர்கள் நம்பியிருக்கிறபடியால்

பூரண சமாதானத்திற்கு நம்பிக்கை அவசியம். இதில் தேவனு டைய நன்மையும் மனிதனின் செயலும் அடங்கியுள்ளன. நாம் தேவனை நம்புகிறபடியால் நமது மனதை அவர் மீது பதிய வைக்கிறோம். அவர் நமது நம்பிக்கைக்குப் பாத்திரர் என நமக்குக் காண்பித்திருக்கிறபடியால் நாம் அவரை நம்புகிறோம். அவர் நித்தியமானவர். அவர் எப்போதும் உத்தமர். அவர் எப்போதும் நமது நம்பிக்கைக்கு உரியவர். இது நமக்குள் சமாதானத்தைக் கொண்டு வருகிறது.

ஆண்டவராகிய இயேசுவே, நீர் சமாதானத்தின் தேவனாக இருப்பதோடு அந்த சமாதானத்தை எங்களுக்கும் தர ஆவலாயிருப்பதற்காக நான் நன்றி யுடையவனாயிருக்கிறேன். என்னை சமாதானத்தோடு பாதுகாக்கத் தம்மை அர்ப்பணித்திருக்கிறீர். எனது பங்கை நான் நிறைவேற்ற எனக்கு உதவி செய்யும். உமது ஆவியினால் எனது மனம் உம்மிலேயே நிலைத்திருக்கவும், உம்மை எல்லாவிதத்திலும் நம்பவும் உதவி செய்யும்.

இன்றைக்கே உங்கள் மனதை யும், எண்ணங்களையும் இயேசுவின் மேல் நிலைப்படுத்தத் தீர்மானியுங்கள். அவர் ஷாலோமைத் தருபவர். நமது வாழ்வின் கடந்த காலங்களில் அவர் கிரியை செய்த அற்புதமான காரியங் களை எண்ணிப்பார்த்து அவரை நம்புவோம்.

பெருங்காற்றின் போது கர்த்தரை நம்புவது

Trusting in time of tempest

Alexander Carson

"... பாவ அலைகளினால் மூடத் தக்கதாய் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று" மத்.8:24.

இயேசுவை சுமந்த படகு அமிழத்தக்கதான பெருங்காற்று! தேவ குமாரன் பிரயாணம் பண்ணும் கடலில் அமைதி வேண்டாமா? சிருஷ்டிகரை சுமந்து சென்ற படகு அலைகளினால் அலைக்கழிக்கப்படலாமா?

இது மனித சிந்தனை. ஆனாலும் இயேசு சென்ற படகில் பெருங்காற்று வீசியது தேவதிட்டம். படகு அசைந்தாடுகிறது. அழிவு சமீபம் என்று தோன்றுகிறது.

மத்.8:23-27 வாசிக்க. இது ஒரு ஞானமான திட்டம். இதன் மூலம் தேவகுமாரன் தம்மை கடலுக்கும் காற்றுக்கும் ஆண்டவராக வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. 'இரையாதே அமைதலாயிரு' என்று ஆண்டவர் கூறியதும் அது அமைதலாயிற்று. இந்த வார்த்தையின் வல்லமை தான் இவ்வுலகை உருவாக்கியது. இந்த சம்பவத்தின் மூலம் சீஷர்கள் விசுவாசத்தில் வளர்ந்தனர்.

தேவபிள்ளைகளின் பிரயாணத்தில் நல்ல காலநிலைதான் கிடைக்கும் என்ற எண்ணம் கூடாது. தேவகுமாரன் பெருங்காற்றை சந்தித்தால் நாம் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் நல்ல ஒரு பிரயாணத்திற்காக ஜெபிக்கும் ஒரு வாய்ப்பும் தேவன் அதைச் செய்வார் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

அவசியமின்றி தேவன் தமது பிள்ளைகளை சோதனைகளுக்குட் படுத்துவதில்லை. ஒரு தடை முன் வைக்கப்படுமானால் அது தேவனை அழைப்பதற்கும் அவரது அன்பையும் வல்லமையையும் நம்புவதற்கும் நம்மை வழிநடத்தும்.

இயேசு சீடர்களின் பயத்தைக் கடிந்து கொண்டார். அவர்களுடைய விசுவாசம் எங்கே? இயேசு அவர்களருகில் இல்லையா! இயேசு தம்முடைய பிள்ளைகளினருகில் இல்லையா? அவர் நமது அருகிலிருக்கிறார். நாம் நம்பிக்கையுடன் அவரை அழைக்க வேண்டும். "ஆண்டவரே இரட்சியும்."

இயேசு எல்லாவற்றையும் நன்றாக செய்கிறார்

Jesus does all things well

Octovius Winslow

ஆதியிலிருந்து அந்தம் வரை, தொட்டிலிலிருந்து வயோதிபம் வரைக்கும் ஆரம்ப கால பாவ உணர்விலிருந்து இறுதி பாவ மன்னிப்பு வரை, இவ்வுலகிலிருந்து பரலோகம் வரை நமது வனாந்தர வழிகளிலெல்லாம் நம்மை நடத்தியவர் தேவன். "அவர் எல்லாவற்றையும் நன்றாகச் செய்திருக்கிறார்" *மாற்.7:37.*

அதிகார எல்லையிலும், கிருபையிலும், அவருடைய எல்லா வசன சத்தியத்திலும், அவரது அன்பின் அனைத்துப் பாடங்களிலும், அவரது கோலின் அடியிலும், வெளிப்பட்ட எந்த ஒளிக்கதிரிலும், ஒளியை மறைத்த எந்த மேகத்திலும், இனிமை அளித்த எப்பகுதிப் பொருளிலும், கசப்பின் அனுபவங்களிலும் எல்லா புதிர்களிலும், வேதனை, நிந்தனை அனுபவங்களிலும் அவர் கொடுத்ததாயினும், எடுத்ததாயினும் எக்காலத்திலும் நமது சாட்சி, "அவர் எல்லாவற்றையும் நன்றாகச் செய்தார்" என்பதே.

மிகவும் கூடாதது என்று நாம் எண்ணிய பாதைகளில் அவர் கிருபையினால் கடந்து வரச்செய்தார். நமது உலக பிரகாரமான நம்பிக்கைகளை வேரோடே பிடுங்கி எறிந்தார். நமது திட்டங்களைக் குலைத்து, நமது எதிர்பார்ப்புகளில் ஏமாற்றங்களைத் தந்தார். மிகக் கடின மான சோதனைகள் மூலம் சீர்திருத்தப் பள்ளியில் கற்றுக் கொள்ளச் செய்தார். அப்பாடங்கள் மூலம் நம்மைத் தாழ்மையுள்ளவர்களாக்கினார். நமது பெலனை வியாதி மூலம் ஒடுக்கினார், நஷ்டத்தின் மூலம் நம்மை வறுமைக்குள்ளாக்கினார். இவை எல்லாம் எனக்கு விரோதமாக நடைபெறுகிறது என்று சொல்ல வேண்டிய சோதனை ஏற்பட்டது. ஆனால் எதற்காக? நாம் விசுவாசத்தில் பெருகி "நடந்த எல்லாவற்றிலும் என் இயேசு எல்லாவற்றையும் நன்றாகச் செய்தார்" என்று பாடவைக்க

இயேசு தவறு செய்ய முடியாது. நுண்ணோக்கி போன்ற கண்கள் மூலம் அவரது அதிகார வரம்பு, கிருபை ஆகியவற்றை அனைத்து ஒளியிலும் பார்க்க வேண்டும். அவற்றின் கூரிய விளக்கத்தை ஒரு மலரின் இதழைப் போலவும், ஒரு பூச்சியின் சிறகைப் போலவும் பரிசோதிக்க வேண்டும். அப்போது அதின் அதிசயம், அழகு, அதின் அற்புத தகவமைப்பு ஆகியவை வெவ்வேறு விதங்களில் ஆண்டவரால் செயல்படுத்தப்பட்டதை நீங்கள் காணமுடியும்.

அடுத்த அலை மோதி, அடுத்த மேகம் இருண்டு வந்து, அடுத்த இரகசியம் சூழ்ந்து வரும்போது நீங்கள் நம்பிக்கையுடன், "என்ன புதிய சத்தியத்தை போதிக்கப் போகிறார்? என்ன புதிய மகிமை வெளிப்படப் போகிறது? எனது ஆர்வத்தைத் தூண்டி எனது உறுதியை பலப்படுத்தி எனது அன்பை ஆழப்படுத்த என்ன அற்புதத்தை அவர் இப்போது என்னில் செய்யப் போகிறார்?" என்று எடுத்துச் சொல்வீர்கள்.

பத்திரிகை செய்திகள்

ஏப்.18–நாகர்கோவில் பெந்தேகொஸ்தே சபைகளின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. சிறுபான்மை கிறிஸ்தவர்களின் வழிபாட்டு உரிமைகளை தடை செய்யக்கூடாது, கிறிஸ்தவ ஆலயங்கள் கட்ட அனுமதி வழங்க வேண்டும், வழிபாட்டு கட்டிடங்கள் வழங்கும் அனுமதியை முன்பு போலவே பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளுக்கே வழங்க வேண்டும். பொதுச் சொத்து, மதம் சார்ந்த சொத்துக்களை சேதப்படுத்துபவர்களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நேற்று பெந்தேகொஸ்தே சபைகளின் மாமன்றம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதே போல் குமரி மாவட்ட பெந்தேகொஸ்தே சபைகளின் கூட்டமைப்பு சார்பில் நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.ஆர்ப்பாட்டத்துக்கு கூட்டமைப்பு துணைத்தலைவர் வினில் சதீஷ் தலைமை தாங்கினார். செயலாளர் காலேப் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார். பாஸ்டர்கள் டைட்டஸ், ஞானதாஸ், சேவியர், அனைத்து கிறிஸ்தவ போதகர் ஜக்கிய குமரி மாவட்ட செயலாளர் ராஜ் உள்பட பலர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To